1974 மார்ச் 13]

Drinking water supply for Alandur.

*397 *Q.* THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether the over head tank constructed near Alandur has been completed ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு· க. அன்பழகன் : (அ and இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, ஆலந்தூர் குடிநீர் வழங்கு நீர்த்தேக்கப் பணி ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு வேலை நடை பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய இடம் கூட மாற்றப்பட்டு, பைப்கள் கூட வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு ஸ்டாக் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் திட்டத்திற்கு மொத்த தொகை எவ்வளவு செலவிடப்படுகிறது ? அதில் எல்.ஐ.சி.-யிடமிருந்து பெறப்பட்ட பணம் எவ்வளவு? மாநில அரசு கொடுத்த கடன் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆலந்தூர் குடிநீர்த் திட்டம் ஏறத்தாழ 44·28 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட முடியும் என்று முதலில் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், அதற்குப் பக்கத்திலே உள்ள கண்டோன்மெண்ட் பகுதி—பரங்கிமலை என்று கருது கிறேன்—அதுவும் இந்தத் திட்டத்துடன் சேர்த்து இணைக்கப்பட்டதன் காரண மாக இது பெரிய அளவில், செலவு மிச்சமாகும் என்ற அடிப்படையில்—67 லட்சம் ரூபாய் மொத்தச் செலவில் அந்தத் திட்டம் நிறைவேற்றப் படலாம் என்று கருதப்பட்டது. 1969–70-ம் ஆண்டுக்கு பத்து லட்சம் ரூபாய், 1970–71-ம் ஆண்டுக்கு 15·67 லட்சம் ரூபாய், 1971–72-ம் ஆண்டுக்கு 1·64 லட்சம் ரூபாய், அதாவது ஏறத்தாழ 26 லட்சம் ரூபாய் அளவுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் வழங்கியிருக்கிறது. அதற்குமேல் அரசு மேற்கொண்ட இந்தத் திட்டத்தில் வெவ்வேறு பகுதிகளுக்கான குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு முக்கியமான பகுதியில் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அந்த இடம் இன்னும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. மாற்று இடம் கேட்கப்பட்டிருக்கிறது. நகரசபை இன்னும் அந்த இடத்தை வழங்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 398, 399 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

---

* 349–350-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.